# திருவிளையாடல் புராணம்

1. மன்னன், இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.

பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த குசேல பாண்டியன் என்னும் மன்னன் தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்கினான். கபிலரின் நண்பரான இடைக்காடனார் என்னும் புலவர், தாம் இயற்றிய கவிதையினை மன்னன் முன்பு பாட, அதைப் பொருட்படுத்தாமல் மன்னன் புலவரை அவமதித்தான். மனம் வருந்திய இடைக்காடனார், இறைவனிடம் முறையிட்டார். மன்னனின் பிழையை உணர்த்துவதற்காக இறைவன் கடம்பவனக் கோவிலை விட்டு நீங்கி, வடதிரு ஆலவாயில் சென்று தங்கினார். இதை அறிந்த மன்னன் தன் பிழையைப் பொறுத்தருளுமாறு இறைவனை வேண்டி, இடைக்காடனாருக்குச் சிறப்புச் செய்தான்.

2. இடைக்காடனார் இறைவன் திருமுன் விழுந்து வணங்கி உரைத்தன யாவை?

இறைவனிடம் முறையிடல் : இடைக்காடனார் மனம் நொந்து, இறைவன் திருமுன் விழுந்து வணங்கி எழுந்து, “தமிழறியும் பெருமானே அடியார்க்கு நந்தி போன்றவனே! திருஆலவாயிலில் உறையும் இறைவனே! பாண்டிய மன்னர் பொருட்செல்வதோடு கல்விச் செல்வமும் ‘மிக உடையவன் எனக் கூறக்கேட்டு, அவன் முன் சொற்சுவை நிரம்பிய கவிதையைப் பாடினேன். அவனோ சிறிதேனும் சுவைத்துத் தலை அசைக்காமல் புலமையை அவமதித்தான்.

“மேலும் பாண்டியன் என்னை இகழவில்லை. சொல்வின் வடிவமாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும் சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையும் அவமதித்தான் என்று சினத்துடன் கூறிச் சென்றார். அவரது சொல் வேற்படை போல் இறைவனின் திருச்செவியில் சென்று தைத்தது.

3. இடைக்காடனார் சொல்லைக் கேட்ட இறைவனின் செயல் பாது?

இறைவனின் செயல்:

இடைக்காடனார் கூறியதைக் கேட்ட இறைவன் கோயிலை விட்டு வெளியேறி இடைக்காடனாருக்கும் அவர் நண்பராகிய கபிலருக்கும் மனமகிழ்ச்சி உண்டாக்க நினைத்தார். அதனால் இறைவன் ஞானமயமாகிய தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து உமாதேவியாரோடும் திருக்கோவிலை விட்டு வெளியேறி நேர் வடக்கே வையை ஆற்றின் தென்பக்கத்தே ஒரு திருக்கோவிலை உருவாக்கி அங்கு சென்று இருந்தார்.

4. இறைவனிடம் பாண்டிய மன்னன் எவ்வாறு வேண்டினான்?

பாண்டிய மன்னன் இறைவனிடம் வேண்டியது:

" இறைவனே, என்னால் என் படைகளால், என் பகைவரால், கள்வரால், காட்டில் உள்ள விலங்குகளால் இத்தமிழ்நாட்டில், தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா? மறையவர் நல்லொழுக்கத்தில் குறைந்தனரோ? தவமும் தருமமும் சுருங்கியதோ? இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியில் இருந்து தவறினவோ? எமது தந்தையே யான் அறியேன்" என்று இறைவனிடம் பாண்டிய மன்னன் வேண்டினான்.

5. இறைவன் மன்னனிடம் கூறியதையும் பாண்டிய மன்னன் வேண்டிப் போற்றியதையும் எழுதுக

இறைவன் மன்னனிடம் கூறியது: சிறந்த குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த கடம்ப வனத்தை விட்டு ஒரு போதும் நீங்கமாட்டோம். இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் உன்னிடம் இல்லை, இடைக்காடனார் மீது கொண்ட அன்பினால் இவ்வாறு இங்கு வந்தோம்" என்று இறைவன் கூறினார்.

குற்றத்தைப் பொறுக்குமாறு மன்னனின் வேண்டுதல்:

வானிலிருந்து ஒலித்த இறைவனின் சொற்கேட்டுப் பாண்டிய மன்னன், "உமையை ஒரு பாகத்தில் கொண்ட மேலான பரம்பொருளே, புண்ணியனே, சிறியவர்களின் குற்றம் பொறுப்பது பெரியவருக்குப்

பெருமையல்லவா?" என்று தன் குற்றத்தைப் பொறுக்க வேண்டிப் போற்றினான்.

6. திருவிளையாடற்புராணம் குறிப்பு எழுதுக.

- திருவிளையாடற்புராணத்தை இயற்றியவர் பரஞ்சோதி முனிவர்.
- மூன்று காண்டங்களைக் கொண்டது. மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திருவாலவாய்க் காண்டம்.
- அறுபத்து நான்கு படலங்களை உடையது.

7. பரஞ்சோதி முனிவர் குறிப்பு எழுதுக

பெயர்: பரஞ்சோதி முனிவர்
பிறந்த ஊர்: திருமறைக்காடு
காலம்: பதினேழாம் நூற்றாண்டு (சிவபக்தி மிக்கவர்)
இயற்றிய நூல்கள் : திருவிளையாடற்புராணம், திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, வேதாரண்யப் புராணம்.